எமது கொள்கை

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும் வாழ்த்துக் கூறுகின்றோம்.

"அல்லாஹுத் தஆலாவைத் தவிர மெய்யாக வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லையென அறுதியிட்டு உறுதி கூறுகின்றோம்; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை யாருமில்லை; மெய்யாக முகம்மது நபியவர்கள் (இவர்களுக்கு இறைவனருளும் அவன் நன்மாராயமும் உண்டாகுக) அவனுடைய அடியாரும் திருத்தூதரும் ஆவார்களென்றும் அறுதியிட்டு உறுதி கூறுகின்றோம்."

இதுதான் எமது கலிமா.—இது மகா பரிசுத்தமான ஒரு திருமந்திரம். இதை ஒருவன் மனலால் நம்பி வாயால் உச்சரிப்பானாயின் அவன் இஸ்லாமார்க்கத்தில் சேர்ந்துவிடுகிறான். பிறகு அவன் முஸ்லிமா அல்லவா வென்று சந்தேகிப்பதற்கு வேறெந்த முஸ்லிமுக்கும் அதிகாரமில்லை. ஒரு சமயம் இப்பரிசுத்தமான திருமந்திரத்தை ஒருவன் உச்சரித்தபின் அம்மனிதனைச் சரியான முஸ்லிம் அல்லவென்று சிலர் சந்தேகப்பட்டபோது எமது நபிகள் பெருமானார் அவர்கள், "நீங்கள் அம்மனிதனுடைய மனதைப் பிளந்து பார்த்தீர்களோ?" என்று கடிந்து, அப்படி ஒருவனைச் சந்தேகம் நினைப்பது தகாதென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு பெருமானார் திருவாக்கியம் அமைந்திருக்கும்போது இக்காலத்தில் ஒருவன் தான் இஸ்லாமென்று பகிரங்கப் படுத்தி மேலேசொன்ன திருமந்திரத்தை உச்

சரிக்கும்போதே அவனுடைய ஈமானைப்பற்றிச் சிலர் அவ நம்பிக்கைப் படுகின்றனர். அந்தோ பரிதாபம்! இது என்ன விபரீதம்!! இஸ்லாத்தை எங்கும் பரப்பி முஸ்லிம்களை அதி கப்படுத்துவதற்குப் பலர் பல தேசங்களிலும் சென்று பாடுபடும்போது நம் தென்னிந்திய முஸ்லிம் சகோதரர் இஸ்லாத்தில் உள்ளவர்களுக்கே ஈமான்போய் விட்டதென் றும் இவர்கள் காபிர்களாய் விட்டார்களென்றும் வாயால் தூஷித்தும் பேனாவால் எழுதியும் இஷாஅத்தே இஸ்லா முக்கு நேர் விரோதமான காரியங்களையே தமது கடமை யெனக் கருதிச் செய்கின்றனர். இஷாஅத்தே இஸ்லா முக்காகத் தம்முடைய உடல் பொருள் ஆவியையெல்லாம் தத்தம் செய்திருக்கும் வட இந்திய புண்ணியசாலிகளைப் போல் இத்தென்னாட்டிலுள்ளவர்களும் நம் சன்மார்க்கப் பரவுதலுக்காகப் பாடுபடாமலிருந்த போதிலும் தாம் சும்மா இராமல் இஸ்லாத்திலுள்ளவர்களையெல்லாம் காபிர் களென்று தம் வாயால் திட்டம் செய்து விடுகின்றனர்; இவர்கள் இப்படிச் செய்வதால் இஸ்லாத்துக்கும் முஸ்லிம் களுக்கும் என்னபெருமை வந்துவிடுகிறதோ தெரியவில்லை.

யார் எம்மைக்குறித்து என்ன சொன்னபோதிலும் நாங்கள் மனமாரச்சொல்வது மேலே கூறிய திருமந்திரம் தான். அதைமனமார நம்பி வாயாரச்சொல்லிக்கொண்டே இதைஎழுதுகிறோம். எமதுமார்க்கம்ஸுன்னத்து ஜமாஅத் தின்மார்க்கமே; ஸுன்னத்துஜமாஅத்தின் எல்லாக்கொள் கைகளையும் ஒத்துக்கொள்ளுகிறோம். மேலும் குர்ஆன் ஷரீ பின் கட்டளைப்படி (2:256), ஆண்டவன் நமக்குக் கொடுத் திருக்கும் யுக்திக்கும் புத்திக்கும் பொருந்தும்படியாகவும், நமதுமனச்சாக்ஷியின் சுயேச்சைக்குத் தக்கபடியாகவும் முன்னமே அமைந்திருக்கும் அவனது கட்டளைகளுக்கெல்

லாம் முழுதும் தலைசாய்க்கின்றோம். எவரேனும் நமது இஸ்லாமார்க்கம் மனித புத்திக்கு விரோதமாகவேய்மைக் கப்பட்டிருக்கிற தென்றுவது, அல்லது ஒருவர்சொல்லும் விஷயம் புத்திக்குப் பொருத்தமில்லாவிட்டாலும் அதை அப்படியே விழுங்கிவிட வேண்டுமென்றுவது சொல்வா ராயின் யாம்அதை ஒத்துக்கொள்ள மனம் சகியோம். ஏனெனின் அப்படிப்பட்ட விஷயம் எமது நபிகள் பெரு மானாரின் அபிப்பிராயத்துக்கும் இமாம்களின் அபிப்பிரா யத்துக்கும் ஒத்தில்லை; ஆண்டவனும் அவ்வாறு சொல்ல வில்லை. இஸ்லாம் புத்திக்கும் யுக்திக்கும் பொருந்தாமலே அமைக்கப்பட்டிருக்கிறதென்று எந்த உண்மையான முஸ் லிமும் சொல்லத்துணியார். உலகத்திலுள்ள இதர எல்லா மதங்களைக் காட்டினும் நம் சன்மார்க்கம் ஒன்றுதான் மனிதனுடைய அனுஷ்டானத்துக்கு உபயோகப்படக்கூ டிய இலேசான விதமாகவும் அவனது புத்திக்கும் யுக்திக் கும் பொருந்தும்படியாகவும் இறைவனால் அமைக்கப்பட் டிருக்கிற தென்பது எமது தீரமான துணிபு.

ஆண்டவன் மனிதனுக்குப் பகுத்தறிவையும் மனச் சாக்ஷியின் சுதந்தரத்தையும் கொடுத்திருக்கிறான்; முக்கா லத்துக்கும் பொருந்தும்படியான ஒப்பற்ற குர்ஆன் ஷரீ பையும் நமக்கு அருளியிருக்கிறான்; இன்னும், இவ்வு லகத்தில் ஸயன்ஸ் முதலிய சாஸ்திரங்களும் நாளுக்கு நாள் விருத்தியடையும்படியும் அவனே செய்து வருகி றான். நாளுக்கு நாள் ஸயன்ஸ் முதலிய சாஸ்திரங்க ளெல்லாம் அபிவிருத்தியடைந்து வரும்போதும், நமக் கும் ஆண்டவன் பகுத்தறிவையும் மனச்சாக்ஷியின் சுதந் தரத்தையும் கொடுத்திருக்கும் போதும், இறைவனது ஒப்புயர்வற்ற வேதமாகிய குர்ஆன் ஷரீபும் உலகமுடிவு

காலம் வரையில் செல்லத்தக்கதா யிருக்கும் போதும், முற்காலத்திலிருந்த மகான்களே நமது இஸ்லாமார்க்கத்துக்குக் கியாமம்(லோகமுடிவுகாலம்) வரையில்வேண்டிய எல்லா விஷயங்களையும் எழுதிவைத்துவிட்டார்கள், இனி நாம் கண்டுபிடிக்கவேண்டிய ஆழ்ந்தகருத்தொன்றும் குர்ஆன் ஷரீபில் இல்லையென்றால் எந்தப் புத்திமானுடைய பகுத்தறிவுதான் அதை ஏற்றுக்கொள்ளும்? பெரியோர்கள் இதுவரையில் ஆராய்ச்சி செய்தமட்டும் நமது இஸ்லாமார்க்கத்தில் இன்று வரையில் ஒரு மகானேனும் "உலக முடிவுகாலம் வரையில் வேண்டியதெல்லாம் எழுதியாய் விட்டது; இனிமேல் மார்க்கத்திலும் கல்வியிலும் ஆராய்ச்சி செய்ய வேண்டியது ஒன்றுமேயில்லை," என்று எழுதியிருப்பதாய்க் காணப்படவில்லை. இவ்வாறிருக்கும் போது குர்ஆன் ஷரீபின் ஆழ்ந்த கருத்தையெல்லாம் நூதனமாய்க் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் அது புராதன மகான்களின் எழுத்துக்கு விரோதமாய்ப் போகும்படி நேரிடுமென்று தப்பாக எண்ணிக்கொண்டு சிலர் எம்மைப் பலவாறாகத் தூஷிக்கின்றனர். அவர் பிறரை ஜாஹிலென்றும் காபிரென்றும் ஏசுவதாலும் எழுதுவதாலும் பிறர் அவ்வாறு ஆய்விடப்போவதில்லை. புராதனக் கித்தாபுகளுக்குமேல் அதிகமாய் ஒன்றும் எழுதத் தேவையில்லையென்றும், அதனால் நாம் ஆராய்ச்சியே செய்யத்தேவையில்லையென்றும் சிலர் பிடிவாதம் செய்வதனால்தான் முஸ்லிம்களின் கல்வியும் நிலைமையும் இக்காலத்தில் மிகத்தாழ்ந்த நிலைமைக்கு வந்து விட்டன. இக்காரணத்தால் தான் முற்காலத்தில் அறிவின் சுடராய் விளங்கிய முஸ்லிம்கள் இக்காலத்தில்எல்லாராலும் எள்ளப்படும்படியான கேவலஸ்திதிக்கு வந்து விட்டார்கள். இக்காலத்

தில் மற்றெல்லா ஜாதியாரைவிட நம் முஸ்லிம்கள் கல்வியில் மிகத் தாழ்ந்த நிலைமையிலிருப்பதை நம்மில் பலர் அறியார். இதற்கெல்லாம் காரணம் யார்? "முஸ்லிம்கள் நஸாராக்களுடைய இங்கிலீஷை கற்கக்கூடாது, காபிர்களுடைய தமிழை பார்க்கத் தகாது, குர்ஆன் ஷரீபின் இனித் தோன்றும் ஆழ்ந்தகருத்தைையே கண்டுபிடிக்கக் கூடாது," என்று வம்புசெய்யும் சிலபிடிவாதக்காரரல்லவா நமது தற்கால நிலைமைக்குக்காரணம்? வடஇந்தியாவில் 50 வருஷங்களுக்குமுன் ஒருசாஹிப்ஜான் முஸ்லிம்களுக்கு அவசியம் இங்கிலீஷ் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று வாதாடின போது அவரை நேச்சரி யென்று பலர் தூஷிக்க ஆரம்பித்தனர். 30 வருஷங்களுக்குமுன் அதே வடஇந்தியாவில் மற்றொரு முர்ஷித் இஷாஅத்தே இஸ்லாமுக்காக உழைக்க முன்வந்து பிறமதத்தினரின் தாக்குதலால் பிராண அவஸ்தையிலிருந்த தீனுல் இஸ்லாத்துக்கு நல்உயிர் கொடுத்தபோது பலர் அவரைக் காபிர் என்று திட்ட ஆரம்பித்தனர்*. பிறருடைய வசைமொழியை யெல்லாம் வாழ்த்துதலாகக்கொண்டு அவ்விருமகான்களும் இஸ்லாத்துக்கு ஊழியம் செய்ததனால் தான் அவர்களுடைய வழியில் வந்தவர்கள் இப்போது இங்கிலாந்து சென்று துருக்கியின் கிலாபத்து விஷயமாகவும் இஷாஅத்தே இஸ்லாம் விஷயமாகவும் தம் உடல் பொருள் ஆவியை யெல்லாம் பொருட்படுத்தாமல் லில்லாவுக்காக உழைக்கின்றனர். அறியாமையால் சிலர் சொல்வதுபோல் இங்கிலீஷ் நஸாராக்களின் பாஷை யென்று நாம் அதைக் கல்லாமல் கைவிட்டிருப்

*வட இந்தியாவில் விளங்கிய மேஇரண்டு மகான்களுக்காகவும் யாங்கள் வக்காலத்து வாங்கி வியாரிஷ் பேசவில்லை; ஆனால் உண்மையை உரைக்கின்றோம்.

போமாயின் இப்போது கிலாபத்துக்காகவும் இஷாஅத்தே இஸ்லாத்துக்காகவும் யார் மேல்நாடு சென்று உழைப்பார்கள்?

எமது ஆராய்ச்சிக்கு எட்டியமட்டில் இஸ்லாமார்க்கமானது சிலர் எண்ணுவதுபோல் அவ்வளவு குறுகுதலான வழியில் குருட்டுத்தனமாய் அமைக்கப்படவில்லையென்று ஏற்படுகின்றது. இஸ்லாமார்க்கத்தைப்போல் அவ்வளவு தாராளமான சிந்தையுடன் வேறெந்த மதமும் இவ்வுலகில் அமைக்கப்பட்டில்லை யென்பது அறிஞர்களின் கொள்கை. இஸ்லாமியக் கொள்கைப்படி இறைவன் ஒருதேசத்தினருக்கு மட்டுமாவது ஒரு காலத்தினருக்கு மட்டுமாவது ஒரு ஜாதியினருக்கு மட்டுமாவது சொந்தமல்ல. இறைவன் எல்லா உலகங்களுக்கும் தலைவனு யிருக்கிறான் (ரப்பில் ஆலமீன்); "தன்னைத்தவிர வேறொருவரும் தனக்கு இணையில்லாதவனே அல்லாஹுத் தஆலா; அவன் எப்பொழுதும் ஜீவித்திருப்பவன். பிறரெல்லோரையும் காப்பாற்றுகிறவன்; அரை உறக்கமேனும் அயர்ந்த நித்திரையேனும் அவன்மீது சாடுவதில்லை; வானங்களிலுள்ள எல்லாவஸ்துக்களும் பூமியிலுள்ள எல்லாவஸ்துக்களும் அவனுடையவே; அவனுடைய அனுமதிபெறுமல் அவனிடம் யார் ஸிபாரிஷுக்கு நெருங்கமுடியும்? அவர்களுக்கு முன்னுள்ளதையும் அவர்களுக்குப் பின்னுள்ளதையும் அவனறிகிறான்; அவன் நாடினது தவிர அவனது ஞானத்தில் வேறொன்றையும் அவர்கள் உணர்ந்து கொள்ளமுடியாது; வானங்களின் மீதும் புவியின் மீதும் அவனது அறிவு விஸ்தரித்திருக்கின்றது. இவற்றையெல்லாம் வைத்துக் காப்பாற்றுவதால் அவனுக்கொன்றும் சிரமமில்லை; அவன் மிக உயர்ந்தவனுகவும் பெரியவனுகவும் இருக்கிறான்."—(அல்

குர்ஆன் 2:255). இப்படிப்பட்ட இறைவன் இஸ்லாமிய சகோதரர்களுக்கு மட்டுமே சொந்தமானவன் என்று சொல்ல யாருக்கும் பாத்தியமில்லை; அல்லாஹுத்தஆலா தான் ஒருவர்க்கத்தாருக்கு மட்டுமே சொந்தமானவன் என்று எங்கும் சொல்லவில்லை. அவன் சற்றும் பொறுமையற்றவன். வேண்டுமாயின் சிலர் தம்மிடத்திலுள்ள பொறுமைக் குணத்தால் தம்முடைய பொறுமைக் குணத்தை அவன்மீது ஏற்றி அல்லாஹுத் தஆலாவையும் பொறுமைக்காரனாகச் செய்துவிடலாம்; ஆனால் இயற்கையில் ஆண்டவன் சற்றும் பொறுமைக்குணம் அற்றவன். குர்ஆன் ஷரீபின் உண்மைக் கருத்தை உணராமல், பிறமதத்தினர் சொல்வதுபோல் நம்முஸ்லிம்களும் அல்லாஹுத் தஆலாவின் மீது அசிங்கையான குணங்களை யெல்லாம் ஏற்றும் பக்ஷத்தில் அவனது பெருந்தன்மையையும் கம்பீரத்தையும் நாம் இழிவுசெய்தவராகவே ஆகின்றோம். குர்ஆன் ஷரீபின் கருத்துக்கு முரணாய் இறைவனது தலைமேல் இல்லாத துர்க்குணத்தை யெல்லாம் சுமத்திவிடும் பக்ஷத்தில் இதர மதங்களை யெல்லாம்விட இஸ்லாமார்க்கம் சிலாக்கியமுள்ளதென்னும் பெருமையானது சிறுமைப்பட்டுப்போகிறது. ஆதலின் முஸ்லிம் சகோதரர்களே! ஆண்டவனது அந்தஸ்தை நும்மனோபாவப்படி திருப்பி அவனது குணத்துக்குத் தாழ்ச்சியை யுண்டுபண்ணு திருப்பீர்களாக.

அல்லாஹுத் தஆலா உலகங்களுக்கெல்லாம் தலைவனாகவும் எல்லோருக்கும் பொதுவாகவும் இருப்பதுபோல் நமது நபிகள் பெருமானாரவர்களும் அவர்கள் மூலியமாய் வெளிப்பட்ட குர்ஆன் ஷரீபும் எல்லோருக்கும் பொதுவென்றே சொல்கிறோம். எல்லாக் காலத்துக்கும் எல்லாத் தேசத்துக்கும் எல்லாஜாதியாருக்கும் பொதுவாகவே

எமது ரஸூலேகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவ்வுலகத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இப்படியே எமது ஒப்பற்ற திருமறையும் (குர்ஆன்ஷரீபும்) எல்லோருக்கும் பொதுவாக இறக்கப்பட்டிருக்கிறது.

ஆண்டவனும் அவனது ரஸூலும் அவனது வேதமும் எல்லோருக்கும் பொதுவாய் ஏற்பட்டிருப்பதனால் தான் இஸ்லா மார்க்கத்தில் போல் வேறெந்த மார்க்கத்திலும் மத சுதந்தரமும் (Religious toleration) மனச்சாக்ஷிச் சுதந்தரமும் (Freedom of conscience) மனிதர்களுக்குக் கொடுக்கப்படவில்லையென்று அறிஞர் கூறுகின்றனர் (அல்குர்ஆன், 2:256 ; 109:6). இஸ்லாமார்க்கத்தில் காணப்படும் தாராளச் சிந்தையைக் குர்ஆன் ஷரீபின் இவ்வொரே வாக்கியத்தால் நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்:- "உறுதியாக, எஹூதிகளின் மார்க்கச் சட்டங்களை நம்புகிறவர்களும், அவற்றிற்குக் கீழ்ப்படிகிறவர்களும், கிரிஸ்தவர்களும், ஸாபியீன்களும் யாராயிருந்தபோதிலும் அல்லாஹுத் தஆலாவின்மீதும் கடைசித்தீர்ப்பு நாளின்மீதும் நம்பிக்கைவைத்து நற்கிரியைகளைச் செய்து வருபவருக்கெல்லாம் அவர்களுடைய சன்மானம் திட்டமாக ஆண்டவனிடத்தி லிருக்கிறது. அவர்கள் மீது அச்சப்பாடு வரப்போகிறதில்லை. அவர்களும் மனம் வருந்தத்தேவையில்லை." இன்னுமொரு வாக்கியமும் மேற்கூறியதற்கு அத்தாக்ஷியாக இங்கு எழுதுவோம்:—"கிழக்குத் திசையைநோக்கியேனும் மேற்குத்திசையை நோக்கியேனும் உங்களுடைய முகங்களைத் திருப்பி வைத்துக்கொள்வது சற்குண சன்மார்க்கமாக மாட்டாது; ஆனால் ஒருவன் அல்லாஹுத் தஆலாவின்மீதும் கடைசிநாளின்மீதும் அமரர்களின்மீதும் வேதங்களின்மீதும் தீர்க்கதரிசிகளின்மீதும் நம்பிக்கை

வைத்து, ஆண்டவன்மீதுள்ள அபிமானத்தால் தன்னுடைய சுற்றத்தாருக்கும் அனாதைகளுக்கும் பண உதவி வேண்டுவோருக்கும் வழிப்போக்கருக்கும் யாசகருக்கும் அடிமைகளை விடுதலை செய்வதற்கும் தன் திரவியத்தை அள்ளிக்கொடுத்து, தொழுகையையும் விடாமல், ஏழை வரியையும் கொடுப்பதுதான் சற்குண சன்மார்க்கமாகும்." இப்படிப்பட்ட வாக்கியங்கள் இன்னும் பல எடுத்துக் காட்டலாம்.

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! நம்முடைய தீனுல் இஸ்லாம் மிகக்குறுகிய இடுக்கு முடுக்கான அஸ்திவாரத்தின்மீது அமைக்கப்படவில்லை; ஆனால் மிக விசாலமான தாராளமுள்ள அஸ்திவாரத்தின் மீதே அமைக்கப்பட்டிருக்கிறதென்று உணர்வீர்களாக. மனிதனுடைய மனச்சாக்ஷிக்குச் சுதந்தரம் உண்டென்பதும் அவன் தன் பகுத்தறிவைச் செம்மையாய் உபயோகிக்கலாம் என்பதும் இஸ்லாமார்க்கத்தின் விசேஷகுணங்களாகும். இம்மார்க்கத்தில் ஒரு விஷயத்தைக்குறித்து ஒரு மகான் ஓர் அபிப்பிராயம் கொண்டால் அதே அபிப்பிராயத்தை மற்றெல்லாரும் பின்பற்ற வேண்டுமென்றும் வேறொருவரும் வேறுவித அபிப்பிராயம் கொள்ளக்கூடாதென்றும பிடிவாதச் சட்டம் ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட அபிப்பிராய பேதம் இல்லாவிடின் ஸுன்னத்து ஜமாஅத்தில் நான்குவகை மதஹபுகள் இருக்கக் காரணமில்லை. நெடுநாளாய் இந்நான்கு மதஹபுகளும் இருந்து வருவதே அந்நான்கு இமாம்களும் சில அனுஷ்டான முறைகளில் அபிப்பிராய பேதம் கொண்டிருந்தார்களென்பதை உறுதிப்படுத்துகிறது. இவ்வாறே குர்ஆன்ஷரீபின் ஆயத்து ஒன்றுக்கு வெவ்வேறு மகான்கள் வெவ்வேறு

வகையாய்க் கருத்துக்கொள்ளின் ஒருவருடைய கொள்கை தான் சரியென்றும் மற்றவருடைய கொள்கை தப்பென்றும் வாதிக்க யாருக்கும் அதிகாரமில்லை. ஒரு மகான் சொல்வது சிலருக்குப் பொருத்தமாயிருந்தால் அதை அவர்கள் வைத்துக்கொள்ளட்டும்; வேறொரு மகான் சொல்வது எம்முடைய புத்திக்குப் பொருத்தமாயிருந்தால் அதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஈமான் இஸ்லாம் சம்பந்தமான முக்கியக் கொள்கைகளில் அம்மகான்கள் யாரும் ஒருவருக்கொருவர் வித்தியாசப் படவில்லை. ஸுன்னத்து ஜமாஅத்தின் கோட்பாடுகளில் நாமும் ஒருவருக்கொருவர் வேறுபடுவதில்லை. நமது ஈமான் இஸ்லாம் சம்பந்தமான ஸுன்னத்து ஜமாஅத்தின் முக்கியக் கொள்கைகளில் சம்பந்தப் படாத குர்ஆன் ஆயத்து ஒன்றன் விஷயமாக உங்களுடைய அபிப்பிராயத்துக்கு முரணான வேறு அபிப்பிராயத்தை யாரேனும் கொண்டால் ஏன் நீங்கள் ஆத்திரத்துடன் அவர்களை ஜாஹிலென்றும், பொய்யரென்றும் புரட்டரென்றும், தஜ்ஜாலென்றும், காபிரென்றும், சொல்லுகிறீர்கள்? ஒருகூட்டத்தார் தாங்கள் ஸுன்னத்து ஜமாஅத்தில் ஹனபிமதஹபென்று பகிரங்கப்படுத்திக் கொண்டிருக்கும்போதே அவர்கள் இஸ்லாத்தின் விரோதிகளென்றும் காபிர்களென்றும் பழிதூற்றுவதால் நீங்கள் இஸ்லாத்துக்குச் செய்யும் நன்மை யாது ?

இப்போது உங்களுக்கு விளங்கும்படி ஓர் உதாரணம் எடுத்துக்கொள்வோம்:-குர் ஆன் ஷரீபின் ஸூரத்து ஹூதில் (11-வது அத்தியாயம்) 107-வது ஆயத்தின்படி காபிர்களுக்குச் சதாசர்வகாலமும் நரகவேதனையில்லையென்று யாம் சொல்லுகிறோம். எமது லாஹூர் மௌல்வியவர்

களின் கடிதத்தைப் படித்திருப்பீர்களேல் காபிர்களுக்கு நரகவேதனை நித்தியமென்று முடிவுசெய்ய யாருக்கும் பாத்தியமில்லையென்று நன்ருக உணர்ந்திருப்பீர்கள். எமக்கு இறைவனும் எம்பெருமானாரும் கொடுத்திருக்கும் உத்தரவின்படி எமது பகுத்தறிவை உபயோகித்துப் பார்க்கின் லாஹுர் மௌல்விகள் சொல்லும் வியாக்கியானமே சரியானதென்றும் காபிர்களுக்குச் சதா சர்வகாலமும் நரகவேதனை யுண்டென்று சொல்ல ஆதாரம் ஒன்றுமில்லையென்றும் எமக்குப் புலப்படுகின்றது. வேறு சிலருடைய அபிப்பிராயத்தில் காபிர்களுக்கு என்றென்றைக்கும் நரகவேதனை முடிவடையாதென்று ஏற்படும் பக்ஷத்தில் அதனுல் எமக்கொன்றும் மனவலி யில்லை. ஆனுல் வேறு சிலர் கொள்ளும் அபிப்பிராயமே சரியானதென்றும் வேருயாரும் அதற்கு முரணை அபிப்பிராயம் கொள்ளக்கூடாதென்றும் எங்களைத்திட்ட அவர்களுக்கு என்ன அதிகாரமிருக்கிறது ?* இதர முஸ்லிம்களை ஏசுவதே தாம் இஸ்லாத்துக்குச் செய்யக்கூடிய பெருத்த ஊழியமெனக்கருது

---

*இந்த 4-வது இதழ் அச்சுக்குச் சென்ற பின், 25-4-20 ஞாயிற்றுக்கிழமை யன்று இம்மிஸ்கீனுடன் சம்பாஷித்து இம்மிஸ்கீனையும் எமது முஸ்லிம் சங்கத்தையும் அதன் ஊழியத்தையும் அளவுகடந்து சிலாகித்துக்கொண்ட ஒரு மஹா பெரிய மௌல்வி சம்பாஷணை முடிந்தவுடன் காபிர்களுக்கு நரகமுடிவு உண்டென்று லாஹுர் மௌல்வி எழுதியிருப்பது புத்திக்குப் பொருத்தமாயிருந்தபோதிலும் காபிர்களுக்கு நரகம்முடியவே மாட்டாது என்னும் புத்திக்குப் பொருத்தமில்லாத விஷயத்தையே ஒத்துக்கொள்ள வேண்டுமென்றுஇம்மிஸ்கீனை வற்புறுத்தினுர். நரகமுடிவைப்பற்றியும் இதரவிஷயங்களைப்பற்றியும் புத்திக்குப் பொருத்தமுள்ளதை நீக்கிப் புத்திக்குப் பொருத்தமில்லாததையே ஒத்துக்கொள்ளுதல்தான் ஸுன்னத்து ஜமாஅத்தென்ருர் அந்த மௌ

கின்றனர் போலும். அவர்களுடைய அபிப்பிராயத்தை அவர்கள் வைத்துக்கொள்ளட்டும்; எங்களுடைய பகுத்தறிவில் சரியென்றுபடும் அபிப்பிராயத்தை நாங்கள் வைத்துக்கொள்ளுகிறோம். ஸூரத்து ஹூதில் 107-வது ஆயத்தின்படி நாங்கள் கொள்ளும் கருத்தும் வேறு சிலர் கொள்ளும் கருத்தும் ஈமான் இஸ்லாம் சம்பந்தமான ஸுன்னத்து ஜமாஅத்தின் முக்கியக்கொள்கைகளை இடிக்கவில்லை. இவ்வாறிருக்கும் போதும் நிஷ்காரணமாய் எங்களைத் தூஷிப்பதால் அவர்கள் எம்மைக் குறைவுபடுத்தி இஸ்லாத்துக்குப் பெருத்த ஊழியம் செய்துவிட்டதாகக் கருதுகிறார்களோ? இல்லை. அவர்கள் எம்மை ஒன்றும் குறைவுபடுத்தவில்லை; ஆனால் தம்மையும் தமது கல்வியையும் தமது தீனையுமே குறைவுபடுத்துகின்றனர். எம்மை

ல்வி. இச்சிற்றறிவுடையேனுக்கு அவர் சொன்னது புத்திக்குப் பொருத்தமாய்க் காணப்படவில்லை. இது தங்களுடைய மேலான புத்திக்குப் பொருத்தமாயிருக்கிறதோ வென்று மஹாமேதாவிகளாகிய தாங்கள் நன்கு சிந்தனை செய்யுங்கள். புத்திக்குப்பொருத்தமானதை விட்டுப் புத்திக்குப்பொருத்தமில்லாததையே ஒத்துக்கொள்ளுதல் ஸுன்னத்து ஜமாஅத்தாகமாட்டாது. ஆனால் ஸுன்னத்து ஜமாஅத்தின் ஒவ்வோர் அம்சமும் புத்திக்கும்யுக்திக்கும் பொருந்தும்படியே அமைக்கப்பட்டிருக்கிறது. ஸயன்ஸ் ஞானத்தைக்கொண்டு பரிசீலனை செய்தால் ஸுன்னத்து ஜமாஅத்தின் கொள்கை ஒவ்வொன்றுக்கும் காரண காரியப்பொருத்தம் விளங்கும். இப்போதுள்ள ஸயன்ஸ் ஞானத்தால் எல்லா ரகஸ்யங்களும் விளங்காவிடினும் இன்னும் நாளடைவில் நமது இஸ்லாமார்க்கத்தின் காரணகாரியப் பொருத்தங்களெல்லாம் நன்கு விளங்கும். ஆதலின் புத்திக்கும் யுக்திக்கும் பொருந்தும்படி ஸயன்ஸ் முறைப்படி ஆதியிலேயே அமைந்திருப்பதுதான் இஸ்லாம். இஸ்லாத்தில் யுக்திக்கும் புத்திக்கும் பொருந்தாமல் ஒன்றும் அமைக்கப்படவேயில்லை. இது திண்ணம். இதுதான் இஸ்லாத்தின் பெருமை.

என்னசொல்லி அவர்கள் திட்டினபோதிலும் நாங்கள் ஷஹாதத்துக் கலிமாவை உச்சரித்துக்கொண்டு ஸுன்னத்து ஜமாஅத்திலேயே இருந்து வருகிறோம்.

நாங்கள் யாரென்றும், எங்களுடைய கொள்கை எப்படிப்பட்டதென்றும், இஸ்லாத்தின் அபிவிருத்திக்காக எங்கள் மனம் துடித்துக்கொண்டிருக்கிறதா இல்லையாவென்றும் நீங்கள் லில்லாவுக்காக முன்வந்து எங்களுடன் கலந்து பரிசீலனைசெய்து பாருங்கள். எங்களுடைய எண்ணமும் ஊழியமும் இன்ன இன்னதென்று உணர்ந்து கொள்ளாமல் எங்களை இஸ்லாத்தின் விரோதி யென்றும் காபிர்களென்றும் ஜாஹில்களென்றும் திட்டுவதால் நமக்கும் நமது தீனுல் இஸ்லாத்துக்கும் என்ன நன்மை வரப்போகிறது? இப்படி நீங்கள் செய்வதால் இஸ்லாத்தின் சகோதர ஒற்றுமையென்னும் ஆணிவேருக்கே அபாயத்தை வலிய வருவித்துக் கொள்ளுகிறவர்களா யிருக்கிறீர்கள்.

இத்தென்னாட்டில் அரபிமதரஸாக்களில் மௌல்விப் பட்டத்துக்காகச் சொல்லிக்கொடுக்கும் படிப்பே இக்காலத்துக்குப் போதுமான கல்வியல்லவென்றும் அப்படிப்பு மனிதர்களின் அறிவைப் போதுமானபடி விசாலிக்கச் செய்வதில்லையென்றும் மிகப்பெரிய கல்விமான்களெல்லாம் அபிப்பிராயப்படும் இக்காலத்தில் ஒரு சாதாரண மதரஸாவின் தலைக்கடையால் காலையில் நுழைந்து மாலைப் பொழுதுக்குள் புழைக்கடையால் வெளியில் வந்துவிடும் ஒவ்வொரு தாலிபுல் இல்மும் (மாணுக்கரும்) தம்மை ஒரு மௌலானா மௌல்வியென்று எண்ணிக்கொண்டு வெளியில் உலமாக்கள் போல உலாவிப் படாடோபம் செய்து வருகின்றனர். மௌலானா மௌல்விகளுக்குரிய படிப்பை ஒரு

வர் கற்றுணர்ந்திருக்கிறுரா அப்படிப்பில் அவர் தேர்ச்சியடைந்திருக்கிறுராவென்று நம் முஸ்லிம்கள் ஒருவரையும் பரிசீலனை செய்வதில்லை. ஒருவர் சரியான கல்விகற்றுப் பிறகு மௌல்விப் பட்டத்துக்குரிய பரீக்ஷையில் தேறிஞரா அல்லது தவறிஞராவென்று கண்டுபிடிக்க அரபி மதரஸாக்களில் எவ்விதப் பரீக்ஷையும் ஏற்படாததால் ஒவ்வொரு மதரஸாவிலும் ஓதும் ஒவ்வொரு தாலிபுல் இல்மும் சில நாளைக்குள் மௌல்வியாய் விடுகின்றனர். தேறினவர் இன்ஞென்றும் தவறினவர் இன்ஞென்றும் கண்டுபிடிக்கச் சரியான பரீக்ஷையில்லாததால் தான் எல்லாரும் தேறின மௌல்வியென்றே தம்மை மதித்துக்கொள்ளுகின்றனர். தவறுகிற வழக்கமேயில்லாமல் அறிஞரும் அல்லாரும் எல்லாரும் தேறின மௌல்விகளாய் விடுவதால் தான் முஸ்லிம்களின் மார்க்கக்கல்வி இப்போது இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்குவந்துவிட்டது. இப்படிப்பட்ட மௌல்விகளில்பலர் பிரசங்கமேடைமேல் பிரசங்கமாரிபொழியும்போது இதரர்களைத் தூஷித்துப் பேசிவிட்டால் அதுதான் தமது மௌல்பித்தனமென்று மதித்துக்கொள்ளுகின்றனர்; பிரசங்கம் கேட்போரில் பலரும் அப்படிப்பட்ட மௌல்வியே மகாகெட்டிக்காரரென்று போற்றுகின்றனர். இப்படிப்பட்ட இழிவான விஷயம் நடைபெறுமட்டும் இஸ்லாத்துக்குப் பலஹீனமே யொழிய ஒன்றும் நன்மையில்லை. இஸ்லாமார்க்கமும் முஸ்லிம்களும் முன்னுக்கு வரவேண்டுமாயின் அரபி மதரஸாக்களிலுள்ள மௌல்விப் பட்டத்துக்குரிய படிப்பு முறைகளை இக்கால ஒழுங்குக்குத் தக்கபடி மாற்றி ஆங்கிலக் கலாசாலைகளி லிருப்பதேபோல் உயர்தரக் கல்வியைக் கற்றுக்கொடுக்க வேண்டும். மதரஸாக்களில் பலவகை வகுப்புக்களை ஏற்படுத்தி ஒவ்வொரு வகுப்புக்கும்

கவர்ண்மெண்ட்டார் செய்வது போல் தக்க பரீக்ஷைவைக்க வேண்டும். உயர்தரப் பரீக்ஷையில் தேறினவர்களே மௌல்விகளாக வேண்டும். மேலும் ஒவ்வொருவரும் ராஜ பாஷையான இங்கிலீஷும் தாய் பாஷையான தமிழும் கசடறக் கற்கவேண்டும். இன்னும், இஸ்லாமார்க்கத்திலுள்ள குர்ஆன்ஷரீபு ஹதீது ஷரீபு முதல் எல்லாக் கித்தாபுகளும் எல்லோருக்கும் படிக்கக் கிடைக்கும்படி எளிய தமிழில் மொழிபெயர்க்கப் படவேண்டும். இப்படிப்பட்ட சீர்திருத்தமெல்லாம் நடவாத வரையில் இத்தென்னாட்டில் இஸ்லாமார்க்கம் க்ஷீணித்துக்கொண்டேபோகும். இது நிச்சயம்! நிச்சயம்!! நிச்சயம்!!!

இஸ்லாமிய சகோதரர்களே! ஒரு சாதாரண அரபிமதரஸாவில் சில கித்தாபுகளைச் சிலர் அரைகுறையாய் ஓதிவிட்டுத் தங்களுடைய குறுகிய புத்திக்கு எட்டினமட்டும் அக்கித்தாபுகளின் கருத்தை உணர்ந்து கொண்டு அதுவே சரியென்றும் தாங்கள் ஓதியதற்குமேல் அதிகமான நூல்கள் உலகில் இல்லையென்றும் பிறரைத் தூஷிக்க முன்வருமுன் இஸ்லாம் இன்னதென்பதையும் அதன் ஒழுங்கு இப்படிப்பட்டதென்பதையும் அவர்கள் நன்குணர்ந்து கொள்வார்களென்று வேண்டுகின்றனம். இஸ்லாம் என்பது ஆண்டவனுக்கு வழிபடுதல் என்று மட்டும் அருத்தம் கொள்ளாது; ஆண்டவனுக்கும் வழிபட்டு அவனது படைப்புக்களின் மீதும் கருணைவைத்து அவற்றிற்கு நாம் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்வதென்பதுதான் சரியான கருத்தாகும் (அல்குர்ஆன், 2:177). "உறுதியாக வணக்கமானது அருவருப்பான காரியங்களிலிருந்தும் வெறுக்கத்தக்க விஷயங்களிலிருந்தும், கலகங்களிலிருந்தும் மனிதர்களைத் தடுக்கவேண்டும்" (குர்ஆன்). உண்மையான

வணக்கமானது நம்முடைய மனதில் குறுகுதலாயிருக்கும் அசிங்கையையும் பொறுமையையும் போக்கித் தாராளச் சிந்தையையூட்டி இதரர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளில் நமக்கு நல் எண்ணத்தை ஊட்டவேண்டும். ஆண்டவனை நேசிப்பவர்கள் அவனது படைப்புக்களை அதிகமாய் நேசித்தல் வேண்டும். "நீங்கள் ஆண்டவனை விசுவசிப்பதாய்ச் சொல்லுகிறீர்களே; அஃதுண்மையாயின் அவனுடைய படைப்புக்களை முன்னால் நேசியுங்கள்," என்று எமது நபிகள் பிரான் அடிக்கடி சொல்வார்கள். இஸ்லா மார்க்கத்தை உள்ளது உள்ளபடி ஒருவன் உணர்வானாயின் அவனது புத்தியானது நிச்சயமாக விசாலமானதாய்த் தான் காணப்படுமென்று ஒரு பெரியோர் சொல்கிறார். "நீர் படைத்தவனை நேசிக்கிறீரோ? அப்படியாயின் உம்முடனுள்ள இதர படைப்புக்களை முன்னால் நேசிப்பீராக. ஏழைகளின் மீதும் தரித்திரர்களின் மீதும் ஆண்டவனுக்காக இரக்கம் வைப்பீராக." "எந்த மனிதனிடத்திலிருந்து மனித வர்க்கத்துக்கு அதிகமான நன்மை யுண்டாகிறதோ அவன்தான் மகா சிலாக்கியமான மனிதன்." (நாயக வாக்கியம்).

மேலே சொன்ன இலக்ஷணப்படி முஸ்லிம்கள் தமது சகோதரர்களை நேசிக்கக் கற்றுக் கொள்வார்களாயின் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் மெத்த நன்மையுண்டாகும். இவ்வளவு சொல்லியும் தங்களுடைய வசைமொழியை அவர்கள் விடாமலிருப்பார்களாயின் ஆண்டவனிடத்திலேயே நாங்கள் எங்கள் ஈமானைப்பற்றிச் சாக்ஷிவைத்து விடுகிறோம். நன்மையும் தீமையும் நாயனறிவான். "உண்மையைக்கொண்டு வானங்களையும் புவியையும் அவன் படைத்தான்; அவன் உம்மை உருவாக்கிப் பிறகு உமக்கு அழ

கான வடிவத்தையும் அமைத்தான்; அவனிடத்திற்குத் தான் திரும்பச் சேரவேண்டும். வானங்களிலும் புவியிலும் இருப்பதெல்லாம் அவனுக்குத் தெரியும்; நீங்கள் ஒளித்து வைத் திருப்பதையும் வெளியாக்குவதையும் அவன் அறி கிறான். மனத்திலிருப்பது இன்னதென்று ஆண்டவன் தெரிந்து கொள்கிறான்." (அல்குர்ஆன், 64:3,4).

கமலம்—2 1—5—20 இதழ்—5

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றேம்.

நிரந்தரமான அற்புதம்.

இப்பூவுலகில் இதுவரையில் இஸ்லாமார்க்கத்தைத் தவிர இதர மதத்தலைவர்களாய்த் தோன்றியிருக்கும் மஹான்களென்று சொல்லப்படுபவர்களின் ஜீவிய சரித்திரங்களை யெல்லாம் நாம் ஆராய்ச்சி செய்யப்புகின் அவர்களுள் ஒவ்வொரு மஹானும் அநேக அற்புதங்களை (முஃஜிஸாத்துகளை)ச் செய்து காட்டியதாய் அவரவரின் சரித்திரத்தில் மட்டுமே எழுதி யிருப்பதைக் காண்கிறோம். அம்மஹான்க ளெல்லாரும் செய்து காட்டியதாய்ச் சொல்லும் அற்புதங்களெல்லாம் வாஸ்தவத்தில் அந்தவிதமாக நடந்திருக்க முடியுமாவென்று கண்டுபிடித்து நிச்சயப் படுத்துவதற்கு வேண்டிய உறுதியும் உண்மையும் நிறைந்த சாக்ஷி